# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 73 — 1973 අගෝස්තු 17 වැනි සිකුරාදා — 1973.08.17

73 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 645 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 647 |

| | பக்கம் |
|---|---|
| விலைக்கட்டளைகள் | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 654 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | — |
| "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் | — |


*கவனிக்க.—விலங்கின அறுவை மருத்துவர், மருத்துவத் தொழிலர் ஆகியோர் பற்றிய (திருத்தம்) சட்டமூலமும் கடன் இணக்கம் (திருத்தம்) சட்டமூலமும் புகையிலை வரி (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 394

பா. 4/2/13 பா. 4/1/5/15/73 (வா.)
பா. 4/2/15 பா. 4/1/14/61/73
பா. 4/1/5/15/73 பா. 4/1/16/73
பா. 4/1/29/102/73 (வா).

### நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம்

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 82, 83 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான்,

1. அபேகோன் அபேசிங்க முதியஞ்சேலாகே மெதிவக வலவ்வே ரிகிரிபண்டா மெதிவக அவர்களைக் கம்பஹா மேற்கு (உ.து.) கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
2. அளுத்கெதர டிங்கிரிபண்டா அவர்களை இறுமளுவ கோறளை கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
3. உதுமாலெவ்வே மரைக்கார் முஹம்மதிஸ்மாயில் அவர்களை அக்கரைப்பற்று மத்திய கிராமசபைப் பகுதி வட்டாரங்கள் 5, 6, 7, 8, 9, 10 ற்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மட்டக்களப்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
4. எக்கநாயக்க துனுகார முதியஞ்சேலாகே உக்குபண்டா பெதியாகொட அவர்களை கன்அத்த பலாத்த (து.ப.) கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவிவகிக்கும் காலத்துள் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
5. ஷெல்டன் குணரத்ன அவர்களை தெவிநுவர பட்டினசபைப் பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,
6. கேரத் முதியஞ்சேலாகே கருணாரத்ன கேரத் அவர்களை குளியாப்பிட்டி நகரசபைப் பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவிவகிக்கும் காலத்துள் குருநாகல் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

***எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.***

*அரசாங்க அச்சகத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.*

*எச். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அச்சகர்,*

7. வீரக்கோன் முதியஞ்சேலாகே மெத வலவ்வே கிரிபண்டா வீரக்கோன் அவர்களை கம்பஹ கிழக்கு (உ.ஐ.) கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

8. அல்பட் அபேவிக்ரம அவர்களை மொறவக்க கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

9. லயனல் பியதிஸ்ஸ ஜயதுங்க அவர்களை குருவிட்ட கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் இரத்தினபுரி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

10. சந்திரசேகர ஜயரத்ன முதியஞ்சேலாகே லொகுபண்டா சந்திரசேகர அவர்களை நிக்கவரட்டிய கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் குருநாகல் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

11. குருப்பு முதியஞ்சேலாகே சுமனபால மடபாவிட்ட அவர்களை வகப்பனஹ பல்லேசியப்பத்துவ கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

12. கதிரேசுப்பிள்ளை கந்தையா அவர்களை அக்கரைப்பற்று மத்திய கிராமசபைப் பகுதி வட்டாரங்களான 1, 2, 3, 4 ற்கான இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மட்டக்களப்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

13. தர்மதாச விக்ரமசிங்க அவர்களை பெரலப்பனுத்தர கிராமப்பகுதி இணக்குவோர் குழாத்தின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்துள் மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

14. கே. எம். சிறிசேன அவர்களை புத்தல பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

15. பீ. சீ. சமரவீர அவர்களை பட்டிபொல பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

16. டீ. ஏ. கரவிட்ட அவர்களை கதிர்காமப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

17. எச். எம். முத்துபண்டா அவர்களை கந்தப்பளை இல. 1 பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

18. டீ. எம். உக்குபண்டா அவர்களை மெதகம பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

19. டபிள்யு. எஸ். பீ. நிமல்தாஸ் அவர்களை கந்தப்பளை இல. 2 கொஸ்லந்த பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

20. ஏ. எம். ஜயவர்த்தன அவர்களை பிந்தென்ன பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

21. எச். எம். குணசேகர அவர்களை கும்பல்வெல கோறளை பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

22. ஆர். எம். ஏ. ரத்நாயக்க அவர்களை மஹப்பலாத்த, பம்பரகம பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

23. பீ. பி. கே. எம். சுதுபண்டா அவர்களை தம்பகல்ல பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

24. டபிள்யு. எம். ஜயவர்த்தன அவர்களை பிந்தென்ன பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

25. எச். எம். அப்புகாமி அவர்களை தண்டவினிப்பலாத்த திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

26. ஜே. எம். ஹீன்பண்டா அவர்களை மக வெதிரட்ட திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

27. பீ. எச். எம். அப்புகாமி அவர்களை பஸ்ஸர திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

28. எச். எம். புஞ்சிரால அவர்களை பிந்தென்ன திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

29. எச். எம். அப்புகாமி அவர்களை பிந்தென்ன கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

30. டபிள்யு. எம். கருணாரத்ன அவர்களை மஹுப்பலாத்த திடீர் மரணவிசாரணை அதிகாரியாகப் பதவி வகிக்கும் காலத்துள் பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

31. கே. ஏ. ஞானதிலக அவர்களை கம்பஹ நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

32. பி. ஏ. சேதன் பெரேரா அவர்களை கம்பஹ நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

33. திருமதி சந்திரலதா வியனகே அவர்களை காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

34. கோம்பல வியனகே சத்யநாத் தர்மரத்ன அவர்களை காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

35. அப்துல் கபூர் மொஹொமட் ஹஸன் டீன் அவர்களை காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

36. டீ. வில்லியம் நாணயக்கார அவர்களை காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

37. வழக்கறிஞர் சந்திரசேன ஸபரமாது பினிதிய அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும், உத்தியோகத் தொடர்பற்ற ஒரு நீதிவானாகவும்,

38. வழக்கறிஞர். பீ. பி. பியசேன அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும், உத்தியோகத் தொடர்பற்ற ஒரு நீதிவானாகவும்,

39. உந்துகொடகே டேவிட் பெரேரா அவர்களை சிலாபம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

40. வருஷப்பெரும குலதிலக அத்தநாயக்க முதியஞ்சேலாகே சந்திர திலக அவர்களை சிலாபம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 03 ந் உ.

8–682—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

1973 இன் இல. 396

எண் : டி. 225/டி. ஐ. எஸ். கி.

## இலங்கைக் கடற்படை—நிரந்தரப் படை—கட்டாய இளைப்பாறல்

இலங்கைக் கடற்படையின் நிரந்தர படையைச் சேர்ந்த கீழ்க்குறிப்பிடப் பட்ட அலுவலர், 1973, ஒகத்து 1 ஆம் திகதி தொடக்கம் கட்டாயமாக இளைப்பாற்றப்பட்டார் :—

பதில் சப்–லெஃப்ரினன்ற் மொஹமெட் ஜுனைட் மொஹமெட் ஆயுப், இலங். க. ப.

என். டி. டி. பீரிஸ்,
பதிற் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 2 ந் உ.

8–788—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

1973 இன் இல. 396

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107ம் அதிகாரம்)**

மிட்டியாகொடவில் வசிக்கும் மத்தும குமாரகே சேதிறிஸ் பிரேமவர்தன குமாரத்ன அவர்கள் மிட்டியாகொட பலிமுல்லே வசிப்பிடத்திலும் அலுவலகத்திலும் மிட்டியாகொட மேலதிக அலுவலகத்திலும் பலப்பிட்டி நீதிபரிபாலன ஆதிக்கத்துள் சிங்கள மொழியில் உறுதி எழுதும் நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பி. சிறிவர்த்தன,
பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

1973 ம் ஆ ஓகஸ்ட் மீ 4 ந் வ.

8–826—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73.

## அரசாங்க அறிவித்தல்கள்

எல. ட—பி. 97/41.

இல. பீளன். 1950

**ஓய்வூதியங்கள்மீதான குறிப்புக்கள்**

1948 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்கள் (திருத்தச்) சட்டத்தினுல் திருத்தப்பட்டவாருன 1934 ஆம் ஆண்டு பெப்புரவரி 5 ஆம் தேதிய ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின் 51 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.

பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணுட்டு அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆ ஓகத்து மீ 2 ந் வ.

அறிவித்தல்

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாருன 1934 ஆம் ஆண்டு பெப்புரவரி 5 ஆந் தேதிய ஓய்வூதியங்கள்மீதான குறிப்புக்கள் அதன் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் "அரசாங்கத்தின் கீழ் சேவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இக்குறிப்புக்களின் 32 (ii) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் கீழ் சேவை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

8–755—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73.

எல்.ட—பி. 104/44

**நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச்சட்டம்**

114 ஆம் பிரிவின் கீழான கட்டளை

இலங்கை மருத்துவ நூல்நிலைய நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களான—

டாக்டர் டொன் ஜினதாச அட்டிகல,
டாக்டர் லெஸ்டர் டிரேகோ கமறன் ஒஸ்டின்,
டாக்டர் செல்டன் அலோசியஸ் கப்ரல்,
டாக்டர் இராசதுரை செல்லையா தனபாலசுந்தரம்,
டாக்டர் எட்மண்ட் மெடொன்சா விஜேராம,

எனபோர், (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ்த் தம்மைச் சட்டமுறையாகக் கூட்டிணைக்கும்படி நீதியமைச்சருக்கு விண்ணப்பஞ் செய்துள்ளனராதலால் :

இப்பொழுது, நீதியமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், மேலே கூறப்பட்ட பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, இக்கட்டளை மூலம், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் கூட்டிணைக்கப்படுதலை அதிகாரமளிப்பதுடன் பின்வருமாறு பணிந்து வெளிப்படுத்துகிறேன் :—

(அ) சொல்லப்பட்ட இலங்கை மருத்துவ நூல்நிலைய நம்பிக்கைப் பொறுப்பின் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அக்காலத்துக்கென முறையாக நியமிக்கப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் அவர்களின் வழியுரிமையாளர்களும் "இலங்கை மருத்துவ நூல்நிலைய நம்பிக்கைப் பொறுப்பு" என்னும் பெயரும் மகுடமும் கொண்டதும் இடையறுவழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றுமுடையதுமான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருதல் வேண்டும் ;

(ஆ) அப்பெயர், மகுடம் என்பன கொண்டு, சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் சார்பில் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான எல்லா விவரணத்தினவான ஆதனத்தினையும் பெறலாம், எடுக்கலாம், உடையவராயிருக்கலாம், வைத்திருக்கலாம் அத்துடன் கையாளலாம் ; அத்துடன்

(இ) சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயரும் மகுடமும் கொண்டு, சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பான எல்லா விடயங்களிலும் நடவடிக்கைகளிலும் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் வழக்குத் தொடரவும் தொடரப்படவும், விடையிறுக்கவும் விடையிறுக்கப்படவும், எதிர்வழக்கு உரைக்கவும் எதிர்வழக்கு உரைக்கப்படவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியுமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

அவசியமானது என எனக்குத் தோன்றும் அத்தகைய முறையில் இக்கட்டளை நீக்கப்படலாம், அல்லது காலத்துக்குக் காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

பீலிக்ஸ் ஆர். ட. பண்டாரநாயக்க,
நீதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆ மே மீ 25 ந் வ.

8–610—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

**அஞ்சல் அலுவலகக் கட்டளைச்சட்டம்**

(190 ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சரினுல் ஆக்கப்பட்ட விதி.

சீ. குமாரசூரியர்,
அஞ்சல் தொலைத்தொடர்பு
அமைச்சர்.

கொழும்பு, ஆடி 31, 1973.

விதி

(190 ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 5 ம் திகதிய 14,707 ஆம் இலக்கக் கசற்றில் வெளியிடப்பட்டதும், 1973 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதிய 59/2 ஆம் இலக்க அதிவிசேடமான வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதியினுல் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது, அதற்கான அட்டவணையில் 111 ஆம் விடயத்திற்கு நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

"112. சிகிரியா சுவரோவியங்களில் இருந்து எடுக்கப்பட்டவொன்றினைச் சித்தரிக்கும் ரூபா 1.55 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரைகள்.

113. பொலனறுவையிலுள்ள கல்விகாரையில் இருந்து எடுக்கப்பட்ட ஓவியமொன்றினைச் சித்தரிக்கும் 90 சதம் இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரைகள்.

114. பொலனறுவையிலுள்ள திவாங்க பிலிமகேயில் இருந்து எடுக்கப்பட்ட ஓவியமொன்றினைச் சித்தரிக்கும் 50 சதம் இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரைகள்.

115. கண்டிக்கு அண்மையாகவுள்ள தெகல்தொறுவை ஆலயத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஓவியமொன்றினைச் சித்தரிக்கும் 35 சதம் இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரைகள்.

8–668/1—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

### முத்திரைக் கட்டளைச் சட்டம்

(247 ஆம் அத்தியாயமான) முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட விதி.

பேர்னாட் சொய்சா, பதில் நிதியமைச்சர்.
கொழும்பு, 31 ஆடி, 1973.

விதி

(247 ஆம் அத்தியாயமான) முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 5 ஆம் திகதிய 14,707 ஆம் இலக்கக் கசற்றில் வெளியிடப்பட்டதும், 1973 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதிய 59/2 ஆம் இலக்கக் அதிவிசேடமான வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப் பட்டதுமான விதியானது, அதற்கான அட்டவணையில், 110 ஆம் விடயத்துக்கு நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

"111. சிகிரியா சுவரோவியங்களில் இருந்து எடுக்கப்பட்டவொன்றி னைச் சித்தரிக்கும் ரூபா 1.55 இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரைகள்.

112. பொலன்னறுவையிலுள்ள கல்விகாரையில் இருந்து எடுக்கப்பட்ட ஓவியமொன்றினைச் சித்தரிக்கும் 90 சதம் இனப் பெறுமதி யுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரைகள்.

113. பொலன்னறுவையிலுள்ள திவாங்க பிலிமகேயில் இருந்து எடுக்கப்பட்ட ஓவியமொன்றினைச் சித்தரிக்கும் 50 சதம் இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரை கள்.

114. கண்டிக்கு அண்மையாகவுள்ள தெகல்தொறுவை ஆலயத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஓவியமொன்றினைச் சித்தரிக்கும் 35 சதம் இனப் பெறுமதியுடைய அஞ்சல் அரசிறை (ஞாபகார்த்த) முத்திரைகள்.

8–668/2—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

### பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டம்

5 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் 1935 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20 ஆந் தேதிய 8,146 ஆம் இலக்க கசெற்றின் அனுபந்தத்திற் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக் காலம் திருத்தப்பட் டபடியான அறிவித்தலை அதற்குள்ள அட்டவணையில் "வடமேற்கு மாகாணம்—குருணாகல் மாவட்டம்" என்னும் தலைப்பின் கீழ்—

1. றேக்கோபத்து கோறளை பிரிவு சம்பந்தமாக அதிலுள்ள 56 ஆம் விடயத்திற்குப் பதிலாக, இதற்குள்ள "அ" என்னும் அட்டவணை யில் தரப்பட்டுள்ள விடயத்தை இடுவதன் மூலமும்,
2. அதிலுள்ள 56 ஆம் விடயத்தை உடனடுத்து இதற்குள்ள "ஆ" என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ள 57 என்னும் புதிய விடயத்தைச் சேர்த்தல் மூலமும்.

1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து இவ்வறிவித்தல் மூலம் மேலும் திருத்துகிறேன்.

பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு 7, 1973 ம் ஆண்டு யூலை மீ 24 ந் உ.

அட்டவணை "அ"

56—பின்வரும் கிராமங்களையடக்கிய றேக்கோபத்து கோறளை கிழக்குப் பிரிவு :—

அக்குறுமுல்லேக்கெதரை
அம்பகெரை
பதகெத்தரை
பம்பறககபெலசை
புழுப்பிட்டியா
தனுபொத்தேகெதரை
திமுனுக்லே
தன்கொல்லே
தன்வல்லே
கலபடகமை
கனக்கெட்டை
கெபல்லவை
கொடவிற்றை
கெல்கமை
கெனபொலே
கதுருககமடித்த
கனுமலே
கண்ணேகெபொலே
கொகனே
பம்பை
பிதுறுவல்லே
இரத்மலே
சியம்பலவெகரை
உகுமிய
வல்பானுகெதரை
வெலகெதரை
வேவெல்யொலே

அட்டவணை "ஆ"

57—பின்வரும் கிராமங்களையடக்கிய றேகோபத்து கோறளை மேற்குப் பிரிவு :—

அருகொடை
அல்கமை
அமுனுகமை
தேவன பித்திவில்லே
இலுக்கோடை
கதுறுவெல்லே
கலுன்தாகெதரை
மயில்லே
மகுல்ஒலுவை
மெதகமகெதரை
மொறன்கலே
நாகனே
நெத்திபொலே
பனுகமுவை
பறகும்புரை
பத்தண்டுவை
பட்டியகமை
பித்திவில்லே
றெக்கவை
செவன்தனே
தம்மிட்டை
உடுகமை
வெகரை

8–687—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

## இலங்கை அரசியலமைப்பு 1972

### 116 ஆம் பிரிவின் கீழ் கையளிப்புக் கட்டளை

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க ஆகிய நான், இலங்கை அரசியல் அமைப்பின் 116 ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய தொடக்கச் சம்பளத்திட்டத்திலுள்ளவர்களாய் இத்துடனுள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திணைக்களங்களில் சேவை செய்யும் அரச உத்தியோகத்தர்களை வேலை நீக்கல் செய்வதற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான தத்துவங்கள் யாவும், இப்போதய இலங்கை அரசியலமைப்புக்கு முன்னிருந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்டவாறு பிற ஏற்பாடுகள் அல்லது மேலும் ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, சொல்லப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அவ்வவற்றுக்கான கையளிப்புக்கட்டளைகளிலும் விதிகளிலும் தரப்பட்டுள்ளவாறு தேவையான மாற்றங்களுடன், அதே நிபந்தனைகள், நியதிகளுக்குக் கீழ் கையளிக்கப்பட்ட தத்துவங்களாகக் கருதப்படல் வேண்டுமெனவும், அமைச்சரவையினால் அல்லது என்னால் காலத்துக்குக்காலம் வெளியிடும் அறிவுறுத்துரைகட்கிணங்க, பிரயோகிக்கப்படல் வேண்டுமென்னும் நிபந்தனைக்கு அமைதல் வேண்டுமென்று இத்தால் கட்டளையிடுகிறேன்.

மைத்திரிபால சேனநாயக்க,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர்.

நீர்ப்பாசன மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சு.
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜூலை மீ

### அட்டவணை

நீர்ப்பாசன திணைக்களம்.

பெருந்தெருக்கள் திணைக்களம்.

காணி அபிவிருத்தித் திணைக்களம்.

அரசாங்க தொழிற்சாலை.

நீர் விநியோக, வடிகாலமைப்பு திணைக்களம்.

வேலைப் பகுதி — மேற்குப் பிரதேசம்.

வேலைப் பகுதி — மத்திய பிரதேசம்.

வேலைப் பகுதி — கிழக்குப் பிரதேசம்.

வேலைப் பகுதி — தெற்குப் பிரதேசம்.

வேலைப் பகுதி — வடக்குப் பிரதேசம்.

வேலைப் பகுதி — வடமேற்குப் பிரதேசம்.

வேலைப் பகுதி — வடமத்திய பிரதேசம்.

வேலைப் பகுதி — ஊவா பிரதேசம்.

வேலைப் பகுதி — சப்பிரகாமுவ பிரதேசம்.

8–693—17.08.73 ந் திகதிய வர்த்தாமனி இல. 73

---

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

### 67 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 67 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பதில் நிதி அமைச்சர், பேர்னாட் சொய்சா ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம், 1965 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 14,490 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலை, அவ்வறிவித்தலுக்குரிய அட்டவணையில், " இலங்கைப் பட்டினி ஒழிப்புப் பிரசாரச்சபை " தொடர்பான விடயத்தை நீக்குவதன் மூலம், திருத்துகின்றேன்.

பேர்னாட் சொய்சா,
பதில் நிதி அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 6 ந் உ.

8–691—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்

### 16 இ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 (இ) (1) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பதில் நிதி அமைச்சர், பேர்னாட் சொய்சா ஆகிய நான், கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரின் வேண்டுகோளின் பேரில், இலங்கைக் குடியரசின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமானவையெனக் கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள், அமைச்சரினால் கருதப்படும் பொறுப்பு முயற்சிகளாகவுள்ள இதற்கான அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள புதிய கைத்தொழிற் பொறுப்பு முயற்சிகள், மேற்சொல்லப்பட்ட பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகளாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பேர்னாட் சொய்சா,
பதில் நிதியமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 3 ந் உ.

### அட்டவணை

| கைத்தொழில் செய்திட்ட விவரம் | புதிய கைத்தொழில் முயறசியின் பெயர் |
|---|---|
| 1. இறப்பர்மயப் பாதுகாப்பு மரமெருகுப் பொருள், மெருகெண்ணெய் ; இறப்பர்மய இனமற் பாதுகாப்புப் படர்வுப்பொருள் ; இறப்பர்மயப் பசைக்குழம்புப் பாதுகாப்புப் படர்வுப் பொருள் வகைகள். | வரைவுபெற்ற சிலோன் இறெசினேப் பிளாஸ்திக்ஸ். |
| 2. மரவிழைப் பட்டு, சிந்தற்றிக்குப் புடைவைகள். | வரைவுபெற்ற கிளின் ரெக்ஸ் இண்டஸ்றீஸ். |
| 3. சரிகையிழை, வலையிழை வகைகள். .. | வரைபுபெற்ற இலேஸ் இண்டஸ்றீஸ். |

குறிப்பு : 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 இ என்னும் பிரிவின்படியானதொரு விடுதொகை, 1973 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு மட்டுமே வழங்கப்படும்—1972 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் திருத்தச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

8–692/1—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

## 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்

1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பதில் நிதி அமைச்சர் பேர்னாட் சொய்சா ஆகிய நான், கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரின் வேண்டுகோளின் பேரில் இலங்கைக் குடியரசின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமானவையெனக் கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரினால் கருதப்படும் திட்டங்களாகவுள்ள இதற்கான அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள புதிய கைத்தொழில் பொறுப்பு முயற்சிகள், மேற்சொல்லப்பட்ட 10 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பேர்னாட் சொய்சா,
பதில் நிதி அமைச்சர்

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 3 ந் உ.

### அட்டவணை

| கைத்தொழில் செய்திட்ட விவரம் | புதிய கைத்தொழில் முயற்சியின் பெயர் |
|---|---|
| 1. இறப்பர்மயப் பாதுகாப்பு மர மெருகுப் பொருள், மெருகெண்ணெய் ; இறப்பர்மய இனமற் பாதுகாப்புப் படர்வுப் பொருள் ; இறப்பர்மயப் பசைக்குழம்புப் பாதுகாப்புப் படர்வுப்பொருள் வகைகள். | வரைவுபெற்ற சிலோன் இறெசினேப் பிளாஸ்திக்ஸ். |
| 2. வண்ணக்கல்வை, பற்றூலிய வண்ணக்கல்வைத் தூரிகைகள். | வரைவுபெற்ற கரிஸ் (சிலோன்) |
| 3. மரவிழைப் பட்டு, சித்தற்றிக்குப் புடைவைகள். | வரைவுபெற்ற கிளின ரெக்ஸ் இண்டஸ்றீஸ். |
| 4. சரிகையிழை வலையிழைவகைகள். .. | வரைவுபெற்ற இலேஸ் இண்டஸ்றீஸ். |

8–692/2—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

### கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயம்) 30 ம் பிரிவின்படி, தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபையினுல் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென்று மேற்கூறிய சட்டத்தின் 29 (3) ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள், 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ம் தேதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 31 ந் உ.

#### அட்டவணை

தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபையால் ஆக்கப்பட்டு 1947 ம் ஆண்டு மே மாதம் 30 ம் தேதி வெளிவந்த 9,708 ம் இலக்கச் செய்தி மடலிற் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள், அந்த அட்டவணையின் IV ம் பாகத்தில் "அரசாங்க விடுமுறைகள்" என்ற தலைப்பின்கீழ் 1 ம் பந்திக்குப்பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதனுமூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :—

" அரசாங்க விடுமுறைகள்

1. (அ) இப் பந்தியினதும் 2 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளர் யாவருக்கும் 1971 ம் ஆண்டின் 29 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கமையப் பின்வரும் அரசாங்க விடுமுறைகளை ஊதியத்துடன் கூடிய விடுமுறைகளாக வழங்குதல் வேண்டும் :—

1. தமிழ்த் தைப்பொங்கற் றிருநாள்,
2. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளுக்கு நேரடுத்து முந்திய நாள்,
3. சிங்கள, தமிழ் புத்தாண்டுத் திருநாள்,
4. பெரிய வெள்ளிக்கிழமை,
5. மே நாள் (மே மாதம் 1 ம் தேதி),
6. சிங்கள விசாக மாதத்தின் பூரணைக்கு நேரடுத்த நாள,
7. குடியரசுத் திருநாள் (மே மாதம் 22 ம் தேதி.),
8. பண்டாரநாயகா நினைவு நாள் (செத்தெம்பர் மாதம் 26 ம் தேதி).
9. நத்தார்த் திருநாள்.

(ஆ) (அ) ஆகிய உப-பந்தியிற் குறிப்பிடப்பட்ட அத்தகைய விடுமுறையொவ்வொன்றுக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊதியமானது, அத்தகைய விடுமுறை நிகழும் மாதத்தில் ஒரு சாதாரண வேலை நாளுக்குக் குறித்த கிழெல்லைக் கூலி வீதமாய் இருத்தல் வேண்டும்."

8–689—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

### சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்

35 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின 35 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, நீதியமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், திருவாளர்கள எச். டபிள்யு. தர்மதாச அவர்கள், பீ. சமரநாயக அவர்கள், பி. டி. ஜினதாச அவர்கள், டி. எஸ். ராஜபக்ச அவர்கள் ஆகியோரை 1973 ஆகஸ்ட் 1 ஆந் தேதி தொடக்கம் ஓராண்டு காலத்திற்கு கொழும்பு, புதிய மகசின் சிறைச்சாலைக்கான உள்ளூர் பார்வையிடற் குழுவின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டயஸ். பண்டாரநாயக்
நீதி அமைச்சர்.

நீதியமைச்சு,
கொழும்பு, 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 4 ஆம் நாள்.

8–776—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### கடற்றொழில் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 212)

பிரிவு 20(9) இன்படி அறிக்கை

**மக்கொன-உஸ்வெல்ல, இத்தபொல கரைவலை மீன்பிடித் தகராறு**

மேற்படி மீன்பிடித் தகராற்றை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட திரு. ஏ. எம். அமீன் அவர்களின் அறிக்கை பொதுமக்களின் தகவலுக்காகக் கடற்றொழில் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 212) பிரிவு 20 (9) இன் பிரகாரம் இத்தால் பிரசுரிக்கப்படுகிறது.

2. இம்மீன்பிடித் தகராற்றினுல் பாதிக்கப்படுகின்ற எவரேனும் அல்லது இத்தகராற்றுடன் சம்பந்தப்பட்ட அல்லது இத்தகராற்றினுல் சம்பவிக்கக்கூடிய எந்த விடயத்தையிட்டும் அல்லது அவ்வறிக்கையில் வழங்கியுள்ள எந்த விடயத்தையிட்டும் முறையீட்டாட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் எவரேனும் அதை இவ்வறிவித்தல் பிரசுரித்த தினத்திலிருந்து ஒரு மாதம் முடிவடையுமுன்னர், கடற்றொழில் அமைச்சர் அவர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.

ஈ. ஜீ. குணவார்த்தன,
செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு.

கொழும்பு, 1973.08.06.

அத்தியாயம் 212 பிரிவு 20 (9) இன் கீழ் அறிக்கை

**மக்கொன-உஸ்வெல்ல, இத்தபொல கரைவலை மீன்பிடித் தகராறு**

(212 ஆம் அத்தியாயமான) கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மேற்படி தகராறு என்னிடம் சாட்டப்பட்டது.

1972.11.16, 1973.01.13, 1973.02.03 ஆகிய தேதிகளில் வேருவலை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் விசாரணை நடந்தேறியது.

மக்கொனவிலுள்ள உஸ்வல்ல, இத்தபொலத் துறைகளில் கரைவலை கொண்டு மீன்பிடிக்கும் உரிமைகள் 1954.07.25 ந் தேதிய 1,096 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1954 ஆம் ஆண்டின் மக்கொன (கரைவலை) மீன்பிடிப் பிரமாணங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரமாணங்களின் கீழ் இவ்விரு துறைகளிலும் கரைவலை கொண்டு [illegible] உரிமைகள் மூன்று குழுவினருக்கு வழங்கப்பட்டது. ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் வேறு இரு குழுவினருக்கும். அவை :—

(அ) மக்கொன கரைவலை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம்.

(ஆ) திருவாளர்கள் எஸ். எஸ். பெரேரா, எஸ். எல். பெரேரா, எஸ். ஈ. சீ. பெரேரா ஆகியோரைக் கொண்ட குழு ஏ.

(இ) திருவாளர்கள எஸ். டி. அநதிரு, எஸ். டி. பட்றிக், எஸ். டி. ஜுவான் ஆகியோரைக் கொண்ட குழு பி.

இக்குழுவினர் தத்தமது உரிமைகளைப் பயன்படுத்தக்கூடிய முறை முதலியன தொடர்பான விபரங்களையும இப்பிரமாணம் விதித்துள்ளது.

1957 ஆம் ஆண்டுக் காலத்தில மக்கொன் கரைவலை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் அதன் தொழிறபாட்டை நிறுத்தியதிற்கும் அதன் பின்னர் மற்றைய இரு குழுவினரதும் ஒன்றுசேர்ந்து விண்ணப்பித்ததால், சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கியைய இவ்விரு குழுவினரும் உரிமைகளைப் பகிர்வதற்கு அதிகாரிகளால் இடைக்கால ஒழுங்குகள் செய்யப்பட்டதற்கும் சான்றுகள் உள.

அத்துடன் குழு ஏ இல் உள்ள மூவரும், குழு பி இல் உள்ள மூவரும முறையே சகோதரர்கள் என்பதற்கும் சான்றுகள் உள. எனவே, குழு ஏ "பெரேரா சகோதரர்கள்" எனவும், குழு பி "அன்ரூ சகோதரர்கள்" எனவும் பொதுவாக வழங்கப்படுகிறது. பெரேரா சகோதரர்களுள் எஸ். எஸ். பெரேரா, எஸ். எல். பெரேரா ஆகிய இருவரும் இறந்துவிட்டதும் மூன்றுவது சகோதரராகிய எஸ். ஈ. சீ. பெரேரா படுக்கையில் இருப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அன்ரூ சகோதரர்கள் மூவரும் இருக்கின்றனர்.

இவ்வழக்கின் முறைப்பாட்டாளரான திரு. எஸ். வீ. எல். பெரேரா. இறந்துபோன திரு. எஸ். எல். பெரேராவின் மகனுவார். திரு. எஸ். வீ. எல். பெரேரா அவர்களின் இவ்விடயம் தொடர்பான 1972.07.25 ந் தேதிய விண்ணப்பத்தில், முற்கூறப்பட்ட மூன்று பெரேரா சகோதரர்களுள் இருவர் வேறு இடங்களில் தொழிலாற்றியமையால் அவர் தந்தையாகிய திரு. எஸ். எல். பெரேரா மட்டுமே, சொல்லப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் பெரேரா சகோதரர்களுக்கு வழங்கப்பட்ட உரிமையைப் பயன்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது, அவரது தந்தைக்குப் பின்னர் இம்மீன்பிடி உரிமை 1960 வரை தன்னால் மட்டுமே முழுதாகப் பயன்படுத்தப்பட்[illegible]

இப்போ போட்டியிடுபவராகிய மேற்கூறப்பட்ட திரு. எஸ். ஈ. சி. பெரேரா வின் மனைவியாகிய திருமதி பி. டி. கதிரின் அவர்கள் ஒரு கரைவலையை யும் வள்ளத்தையும் தனது சொந்தமாக்கிக் கொண்டு, அவரது கணவ ராகிய திரு. எஸ். ஈ. சீ. பெரேரா அவர்களுக்கிருந்த உரிமையில் மீன் பிடிப்பதற்குக் கோருவதுடன் தனக்கிருக்கும் உரிமைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார் என்பதாம்.

இத்தகராற்றின் மற்றக் கட்சியினரான திருமதி பி. டி. கதிரின கூறுவதாவது, 1954 ஆம் ஆண்டின் பிரமாணங்களின் பிரகாரம் மீன்பிடி உரிமைகள் வழங்கப்பட்ட மூன்று பெரேரா சகோதரர்களுள் இருவர் இறந்துவிட்டதாகவும் உயிருடன் இருக்கும் திரு. எஸ். ஈ. சீ. பெரேரா அவர்களுக்கு இம்மீன்பிடி உரிமையிருப்பதால், அவரின் பணிப்புரைக்கேற்ப தான் இந்த உரிமையைப் பயன்படுத்துகின்றார் என்பதாம். இத்தகராற்று முறைப்பாட்டாளருக்கு மீன்பிடிப்பதற்கு உரிமையேதுமிருப்பதை அவர் மறுக்கின்றார்.

இவ்வறிக்கையில், திரு. எஸ். வி. எல். பெரேராவுக்கும் திருமதி பி. டி. கதிரினுக்குமிடையிலான இத்தகராற்றுடன் மேற்கூறப்பட்ட எஸ். எஸ். பெரேரா அவர்களின் மகனாகிய எல். ஜீ. பி. பெரேரா அவர்கள் மீன்பிடி உரிமை கேட்பதும், எல். என். பெரேரா, எஸ். வி. எஸ். பெரேரா அவர்களும் புதிய உரிமைகள் வழங்கப்படுகையில் தமக்கும் மீன்பிடி உரிமைகளைக் கேட்பதுக்குமான விண்ணப்பங்கள் உள. மீன் பிடிக்குத் தேவையான கரைவலை, மீன்பிடி வள்ளங்களைத் தாம் வைத்திருக்கமுடியுமெனவும் குறிப்பிடுகின்றனர்.

விசாரணை ஆரம்பத்தில், ஆணைக்குழுவினது நியதிகள், மற்றையவா களினது மீன்பிடி உரிமைக் கோரிக்கைகளை மேற்கொள்ளாது சொல்லப் பட்ட இரு கட்சியினருக்கிடையிலான தகராற்றை மட்டுமே விசாரணை செய்யவேண்டுமென மட்டுப்படுத்துகின்றதா என்ற கேள்வி எழுந்தது. இந்நிகழ்ச்சிகளில் காட்டப்பட்ட காரணங்களைக் கொண்டு, இவ்விசாரணைக் குழுவிற்கு, மேற்படி மீன்பிடி உரிமைகளுக்கான விண்ணப்பங்களைக் கருதுவதற்குமட்டுமல்லாது 1954 ஆம் ஆண்டுப் பிரமாணங்கள், இச் சந்தர்ப்பத்தில் திருத்தப்படுவதால், போதாமை ஏற்பட்டதால், அன்ரூ சகோதரர்களின் உரிமைகளையும் மீளவாய்தற்கும் தகுதியிருக்கின்ற தென்று நான் கருதுகிறேன்.

மேற்படி தகராறு சம்பந்தப்பட்ட இரு கட்சியினரும், மீன்பிடி உரிமைகள் கேட்டு விண்ணப்பித்தவர்களும், தமக்குள்ளே தாம் தமது தகராற்றிற்கு தீர்வு கண்டுள்ளதாகவும் தமது விண்ணப்பத்தை விலக்கு மாறும் ஒன்றுசேர்ந்து கடற்றொழில் இயக்குநருக்கு 1973.01.29 ந் தேதி விண்ணப்பித்திருந்ததால், ஒரு நீண்ட விசாரணை சந்தோஷ மாகத் தவிர்க்கப்பட்டது. இவ்விடயம் 1973.02.03 ந் திகதி நடைபெற்ற ஆணைக்குழுவின் அமர்வில் தெரிவிக்கப்பட்டது. எனினும், அவர்களு டைய விண்ணப்பத்தில் தகராற்றிற்கு தீர்வு கண்டதாகவும் தமது விண்ணப்பத்தை விலக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளதேயன்றி, அவை எவ்வாறு தீர்வு காணப்பட்டதென்பதும் எதிர் காலத்தில் இம்மீன்பிடி உரிமைகளை எவ்வகையில் அவர்கள் பயன்படுத்துவார்கள் என்பதும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படவில்லை, என்பதை ஆணைக்குழு கண்டது. இவ்வாறே இதனை விட்டால் எதிர் காலத்தில் தகராறுகளும் பிரச்சனை களும் ஏற்படலாமென்றும் சொல்லப்பட்ட 1954 ஆம் ஆண்டின் பிர மாணத்தில் கட்சிக்காரர் இறக்கையில் தீர்வுகாணும் ஏற்பாடுகள் எதுவும் இல்லையென்றும் ஆணைக்குழு அபிப்பிராயப்பட்டதினால் மீன்பிடிக்கும் உரிமை தொடர்பாக ஆணைக்குழு கட்சியாளர்களுடன் பல்வேறு யோசனை களை விவாதித்து கடைசியாக தீர்வுகாணும் நியதிகளை ஏற்படுத்துதல் தொடர்பான ஒரு பிரேரணையில் அன்ரூ சகோதரர்கள் உட்பட எல்லோரும் ஒன்று சேர்ந்து கையொப்பமிட்டனர். ஒரு கட்சியினருக்காகத் தோன்றிய வழக்கறிஞர் திரு. ஜே. கே. குருகுல்சூரியா அவர்களுடனும் சாட்சியளிக் கப்பட்ட இப்பிரேரணை பதிவுக் கோப்பிலிடப்பட்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட இரு துறைகளிலும் பலகுழுவினரால் வலையிட்டுத் தொழில் செய்வதற்கு இடம்போதாதிருப்பதற்கு சான்று பகிர்கிறது. அத்துடன் தற்போதைய நிலையைச் சமாளிப்பதற்கு 1954 ஆம் ஆண்டின் மக்கொன (கரைவலை) மீன்பிடிப் பிரமாணங்கள் போதாதிருப்பதும் காணப்பட்டது. ஆகையால், மேற்சொல்லப்பட்ட குழுவினர்களின் உடன் படிக்கையின் பிரகாரமும் வேறு தேவைகளுக்குமாகவும் கீழ்க்காணும் திட்டம் சிபாரிசு செய்யப்பட்டது :

1. மக்கொனவிலுள்ள இத்தபோல துறை அல்லது உஸ்வெல்ல துறையில் எவ்வருடத்திலேனும் கரைவலைகொண்டு மீன்பிடிப்ப தற்கு மேற்குறிப்பிட்ட இரு குழுவினருக்கும் முழு உரிமை சமமாக வழங்கப்படுகிறது.

   (1) பெரேரா சகோதரர்களும்,

   (2) அன்ரூ சகோதரர்களும்/அல்லது முறையே அவர்களது பிள்ளைகளும்

2. பெரேரா சகோதரர்களென்று அழைக்கப்படும் குழு முறையே எஸ். எஸ். பெரேரா, எஸ். எல். பெரேரா, எஸ். ஈ. சீ. பெரேரா என்னும் மூன்று பேரைக்கொண்டதால் ஒவ்வொருவருக்கும் அவர்களது ஆண் மக்களுக்கு சேரக்கூடியதாக 1/3 பங்கு இருத்தல் வேண்டும்.

3. எவ்வாறாயினும் ஒவ்வொரு பெரேரா சகோதரர்களுக்கும் ஒரு மகனுக்கு மேல் இருந்தபோதும், இத்திட்டத்திற்காக மக்களுள் ஒருவர் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுவர்.

4. மேற்சொல்லப்பட்ட பந்தி 3 இன் பிரகாரம்—
   (அ) எஸ். ஜி. பி. பெரேரா—எஸ். எஸ். பெரேராவின் மகன்
   (ஆ) எஸ். வி. எல். பெரேரா—எஸ். எல். பெரேராவின் மகன்.
   (இ) எஸ். வி. என். பெரேரா—எஸ். ஈ. சீ. பெரேராவின் மகன்
   ஆகியோர் ஏற்றுக்கொள்ளப்படுவர்.

5. இத்திட்டத்திற்காக ஒரு வருடம் செத்தெம்பர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 12 மாத காலத்தைக் கொண்டதாகும்.

6. இத்தபொல துறையில்—

   (அ) கீழேயுள்ள பந்தி 6 (ஆ) வில் குறிப்பிட்டுள்ளதுபோல பெரேரா சகோதரர்கள் ஒவ்வொரு மாதத்திலும் 1 ஆம், 3 ஆம், 5 ஆம் திகதிகளாகிய ஒற்றைவிழும் நாட்களிலும், அதே போல் அன்ரூ சகோதரர்கள் 2 ஆம், 4 ஆம், 6 ஆம் திகதிகளாகிய இரட்டை விழும் நாட்களிலும் கரைவலைகொண்டு மீன்பிடித் தற்கு உரிமையுடையவராவர்.

   (ஆ) மேலே பந்தி 6 (அ) இல் பெரேரா சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு மாதத்திய ஒற்றை எண் திகதிகளில் மேலே பந்தி 4 இல் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பேரும் கீழ்க்கண்ட முறையில் மீன்களைப் பிடிப்பது என்ற அடிப்படை யில் ஒழுங்காக்கப்படும் :—

      எஸ். ஜி. பி. பெரேரா 1 ஆம் நாளும்
      எஸ். வி. எல். பெரேரா 3 ஆம் நாளும்
      எஸ். வி. என். பெரேரா 5 ஆம் நாளும்
      அதன் பின்னர் அவ்வாறே தொடர்ந்தும் மீன்பிடிப்பர்.

7. உஸ்வெல்ல துறையில்—

   (அ) கீழே பந்தி 7 (ஆ) இல் குறிப்பிட்டதன் பிரகாரம் பெரேரா சகோதரர்கள் ஒவ்வொரு மாதமும் 2 ஆம், 4 ஆம், 6 ஆம் நாட்களாகிய இரட்டை விழும் நாட்களிலும் அதேபோல் அன்ரூ சகோதரர்கள் ஒவ்வொரு மாதமும் 1 ஆம், 3 ஆம், 5 ஆம் நாட்களாகிய ஒற்றை விழும் நாட்களிலும் கரைவலை கொண்டு மீன்பிடிப்பதற்கு உரிமையுடையவராவர்.

   (ஆ) மேலே பந்தி 7 (அ) இல் பெரேரா சகோதரர்களுக்கு ஒதுக்கப் பட்ட ஒவ்வொரு மாதத்திய இரட்டை எண் திகதியில் மேலே பந்தி 4 இல் அங்கீகரிக்கப்பட்ட மூன்றுபேரும் கீழ்க் கண்ட முறையில் மீன்களைப் பிடிப்பது என்ற அடிப்படையில் ஒழுங்காக்கப்படும்.

8. 31 நாட்களில் முடியும் மாதத்திலும் மிகுநாள் ஆண்டிலும் இரண்டு அடுத்துவரும் ஒற்றை எண் திகதிகள் வருவதால், இரு குழுவினருக்கும் இது பயன்தருவதால் இவ்வொழுங்கு அவ் வாறேயிருக்கும்.

9. மேற்குறிப்பிட்டவாறு மீன்பிடிக்கும் உரிமையைப் பெறும் எவரும், திணைக்களத்துடன் பதியப்பட்ட மீன்பிடி வள்ளத்தையும் கரை வலையையும் தமக்கென வைத்துக்கொண்டே இம்மீன்பிடி உரிமை யைப் பயன்படுத்தலாம்.

10. மேற்படி ஏற்பாட்டின் பிரகாரம் ஒரு துறையில் மீன்பிடிப்பதற்கு ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட திகதியில் எந்நேரமும் அல்லது பகுதி நேரத்தில் அவர் மீன்பிடிக்கலாம்.

11. அன்ரூ சகோதரர்கள் அல்லது அவர்களது பிள்ளைகளுக்கிடையே எந்த தகராறுகளும் ஏற்படும் பட்சத்தில், பெரேரா சகோதரர் களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குளின் தேவையான சில மாற்றங்களுடன் பொருந்தும்.

இவ்விசாரணைக்கு உதவியளித்த திணைக்கள உத்தியோகத்தருக்கும் பல விடயங்களைத் தெளிவாக்குவதில் உதவியாகவிருந்த வழக்கறிஞர் களுக்கும் எனது நன்றியைக் கூறி இவ்வறிக்கையை முடிக்கின்றேன்.

வ. எம். அமீன்,
ஆணையாளர்,
1973.02.17.

2-683—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரம நாயக்க ஆகிய யான் இதன் மூலம்—.

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 திசெம்பர் மாதம் 11 ஆம் தேதிய 14,936 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 10 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட அநுராதபுர மாவட்டத்திலுள்ள மேற்குகந்தாகோரளை கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கிறேன்.

1. ரம்பாவ, ரம்பாவகம ஐச் சேர்ந்த மனிக்ரால விதானேகே ஜினதாச அவர்கள்
2. சாலியபுர, பஹல ஜனபதய, பாடியங்கடவல ஐச் சேர்ந்த கம்பஹ விதானாலலாகே முதியஞ்சே அவர்கள்
3. சாலியபுர, இஹல ஜனபதய, பாடியங்கடவல ஐச் சேர்ந்த வேலாதேகே ஜினதாச அவர்கள்
4. சாலியபுர, இஹல ஜனபதய, பாடியங்கடவல ஐச் சேர்ந்த நயிதுராலகே உக்குபண்டா அவர்கள்
5. சாலியபுர ஐச் சேர்ந்த டொன் சோமபால ரணதுங்க அவர்கள்.
6. சாலியபுர ஐச் சேர்ந்த அருமபுரகே சயிலஸ் பெர்னாந்து அவர்கள்.
7. பறசங்கஹவவ, மாங்கடவல ஐச் சேர்ந்த பண்டாகே ஹேரத் ஹாமி அவர்கள்
8. அங்புர, குறுந்தங்குளம் விவசாயக்குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த சமரகோன் முதியஞ்சேலாகே அப்புஹாமி அவர்கள்
9. அநுராதபுர குறுந்தங்குளம், விவசாயக்குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த விக்ரம ஆராய்ச்சிக்கே புஞ்சிபண்டா அவர்கள்
10. அநுராதபுர குறுந்தங்குளம் விவசாயக் குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த தினமுல்ல கங்கானமகே சார்லிஸ் அப்புஹாமி அவர்கள்
11. அனுராதபுரம் குருந்தங்குளம், மாத்தளை வீதியைச் சேர்ந்த ரிக்கிரி பண்டா சமரகோண் அவர்கள்
12. சாலியபுர, ஜயந்தி கிராமம், பண்டாரபுளியங்குளத்தைச் சேர்ந்த வர்ணகுலசூரிய அலோசியஸ் பெர்னாந்து அவர்கள்
13. அங்புர, யாழ்ப்பாணவீதி, புளியங்குளத்தைச் சேர்ந்த விஜேசுந்தர முதியஞ்சேலாகே ரிக்கிரிபண்டா அவர்கள்
14. அநுராதபுர, யாழ்ப்பாணவீதி, புளியங்குளத்தைச் சேர்ந்த சேனக முதியஞ்சேலாகே புஞ்சிபண்டா அவர்கள்
15. சாலியபுர, ஜயந்தி கிராமம், பண்டார புளியங்குளத்தைச் சேர்ந்த ஆராய்ச்சிலாகே பியதாச பண்டா அவர்கள்
16. ரம்பாவ, நபடகஸ்பாவ ஐச் சேர்ந்த சீராலகே அப்புஹாமி அவர்கள்
17. ரம்பாவ, வஹமல்கொல்லாவ ஐச் சேர்ந்த ஹேரத்ஹாமிகே கருணாதிலக அவர்கள்
18. மதவாச்சி, சங்கிலிகணதராவ ஐச் சேர்ந்த கபுராலகே ஜோதிபால அவர்கள்
19. ரம்பாவ, ரம்பாவ ஐச் சேர்ந்த ஹேவாவலிகடகே டனி அவர்கள்
20. ரம்பாவ, மாங்கடவையைச் சேர்ந்த லொகு பிடும்பே அப்புஹாமிலாகே டொன் ஹெக்டர் விஜயதுங்க அவர்கள்
21. மிகிந்தலை, மரதன்குளம் ஐச் சேர்ந்த சங்கபால ஆராய்ச்சிகே ரிசட் திசாநாயக அவர்கள்
22. பறசங்கஸ்வவ, ரத்மலே ஐச் சேர்ந்த அப்புராலகே விதான்கே புஞ்சி பண்டா அவர்கள்
23. மதவாச்சி, புல்லெலிய ஐச் சேர்ந்த புஞ்சிராலகே கிரால அவர்கள்
24. ரம்பக்குளம், திவுல்லாவ ஐச் சேர்ந்த உக்குபண்டாகே ஹேதுஹாமி அவர்கள்
25. ரம்பக்குளம், பெல்லங்கடவல ஐச் சேர்ந்த பிங்ஹாமிசே கபுரால அவர்கள்
26. மதவாச்சி, கலவலபொதான ஐச் சேர்ந்த கிரிஹாமிகே ரங்கா அவர்கள்
27. நேரியகுளம், தம்மன்ன அலவக ஐச் சேர்ந்த உக்குபண்டாகே யசபால அவர்கள்
28. நேரியகுளம், தம்மன்ன, அலவக ஐச் சேர்ந்த சீராலகே புஞ்சிரால அவர்கள்

(ஆ) ரம்பாவ, ரம்பாவகம ஐச் சேர்ந்த மனிக்ரால விதானெகே ஜினதாச அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 8 ந் வ..

8–840/1—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரம நாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 டிசெம்பர் மாதம் 11 ஆம் தேதிய 14,936 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 9 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட அநுராதபுர மாவட்டத்திலுள்ள கிழக்கு கந்தாகோரளை கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்திற்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. அநுராதபுரம், கந்தாவ உபதபால் கந்தோரைச் சேர்ந்த உக்குராலகே திலகரட்ண அவர்கள்
2. காட்டகஸ்திகிலிய, பிஹிண்டியகொல்லாவ ஐச் சேர்ந்த திசாநாயக முதியஞ்சேலாகே பண்டாகே சுகதபால அவர்கள்
3. காட்டகஸ்திகிலிய, பிஹிம்பியகொல்லாவ ஐச் சேர்ந்த கொடவத்தை ஆராய்ச்சிகே பார்லிஸ் த சில்வா அவர்கள்
4. காட்டகஸ்திகிலிய, பிஹிம்பியகொல்லாவ, கிரிமட்டியாவ ஐச் சேர்ந்த கந்தா விதானேகே ஹோத் அவர்கள்
5. பிஹிம்பியகொல்லாவ, தம்பலகொல்லாவ ஐச் சேர்ந்த கந்தாதேகே ரிகிரி அப்பு அவர்கள்
6. காட்டகஸ்திகிலிய, பிஹிம்பியகொல்லாவ, கிரிமட்டியாவ ஐச் சேர்ந்த ஜீவாநயிதேகே பொடியப்பு அவர்கள்
7. ரம்பாவ, கல்லஞ்சிய கோனுவ ஐச் சேர்ந்த மில்லபட்டந்திகே மகதுன் அவர்கள்
8. ரம்பாவ, வலஹஹங்குணுவவ ஐச் சேர்ந்த ஹேதுஹாமிகே புஞ்சிபண்டா அவர்கள்
9. ரம்பாவ, வம்இவுற, மஹகணதருவ யாய 2, இல. 155 ஐச் சேர்ந்த தேவஹாமி அப்புஹாமிகே செனவிரத்ன குமாரசிங்க அவர்கள்
10. ரம்பாவ, வம்இவுற, மஹகணதருவ யாய 2, இல : 156 ஐச் சேர்ந்த செனவிரத்ன முதியஞ்சேலாகே நந்தசேன குமாரசிங்க அவர்கள்
11. அநுராதபுரம், கந்தாவ ஐச் சேர்ந்த தென்னக்கோன் முதியஞ்சேலாகே மனதுங்க அவர்கள்
12. ரம்பாவ, வம்இவுற, மஹகணதராவ யாய 2, இல. 114 ஐச் சேர்ந்த செனெவிரத்தின முதியஞ்சேலாகே புஞ்சிபண்டா அவர்கள்
13. ரம்பாவ, கல்லஞ்சிய ஐச் சேர்ந்த அப்புஹாமி வெல்விதானேகே உடையாரே அவர்கள்
14. மிகிந்தலை, மஹகணதராவ, வம்இவுற, இல : 53 ஐச் சேர்ந்த சிறீ நாராயண கபுராலகே கிரால அவர்கள்
15. ரம்பாவ, கல்லஞ்சிய ஐச் சேர்ந்த அப்புராலகே புஞ்சிபண்டா அவர்கள்

16. ரம்பாவ, கல்லஞ்சிய ஐச் சேர்ந்த வலிசிங்க முதியன்சேலாகே அப்புஹாமி அவர்கள்
17. ரம்பாவ, கல்லஞ்சிய ஐச் சேர்ந்த வன்னிஹாமி வலிசிங்க அவர்கள்
18. கந்தாவ, கொனகும்புக்வவ ஐச் சேர்ந்த சேராலகே கதிராகே அவர்கள்
19. அநுராதபுரம், கந்தாவ ஐச் சேர்ந்த புஞ்சிராலகே அப்புஹாமிகே அபயகோன் அவர்கள்
20. அநுராதபுரம், கந்தாவ, அஹடுவாகம் ஐச் சேர்ந்த அப்புரால லேகம்கே தேவாஹாமி அவர்கள்
21. அநுராதபுரம், கந்தாவ, கல்கடவல ஐச் சேர்ந்த புஞ்சிராலகே கதிராகே அவர்கள்
22. ரம்பாவ, கல்லஞ்சிய, திம்பிரிவவ ஐச் சேர்ந்த ரிங்கிரிராலகே புஞ்சிரால அவர்கள்.

(ஆ) அநுராதபுரம், கந்தாவ, உயதபால் கந்தோரைச் சேர்ந்த உக்குராலகே திலகரட்ண அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மென்வும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 8 ந் உ.

8–840/2—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

**1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் சட்டம்**

28 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 28 (1) ஆம் பிரிவினால் எனக்கு அளிக் கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளிநாட்டு, உள்நாட்டு வியா பார அமைச்சரான டிக்கிரி பண்டா இலங்கரட்ன ஆகிய நான், இத்துட னுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கப்படாத சொத்தான 1972 பெப்ரவரி 8 ஆந் திகதிய 14,996/10 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா அரச வியாபார (கொன்சொலிடேட் எக்ஸ்போட்ஸ்) கூட்டுத் தாபனத்தின் தேவைகளுக்கான அசைவற்ற சொத்தின் உத்தேசிக்கப்பட்ட கொள்ளுதலை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

ரி. பி. இலங்கரட்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு, வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 3 ந் உ.

**அட்டவணை**

பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டதும் கொழும்பு மேற்கு மாகாண மாவட்டத்திலுள்ள கொழும்பு மாநகர சங்க எல்லைக்குள், மருதானையில் நிறுவப்பட்டுள்ள வளவுகளையும் காணியையும் கட்டிடங்களையும் பண்டக சாலைகளையும் கொண்டதும், அளவில் ஏறக்குறைய ஒன்றையும் மூன்றி லொரு ஏக்கரையும் (1 ⅓ ஏக்கர்கள்) மருதானை, தர்மபால மாவத்த, மதிப்பீட்டெண் இல. 100 கொண்ட "மரந்தன் ஸ்டோர்ஸ்" என அறியப்பட்டதும் அழைக்கப்பட்டதுமான கட்டிடங்களினதும் காணியினதும் பிரிக்கப்பட்ட பகுதியொன்று, கொழும்பு, த. பெ. இல. 91, மக்வுட்ஸ் லிமிடெட்டினால் உரிமைகோரிப் பெறப்பட்டுள்ளது.

வடக்கு : ஆனந்த மாவத்தையினால் ;

கிழக்கு : தர்மபால மாவத்த, மதிப்பீட்டெண் இல : 100 ஐயும் கொண்ட "மரந்தன் ஸ்டோர்ஸ்" என அழைக்கப்படும் சொத்தின் எஞ்சிய பகுதியினால் ;

தெற்கு ; ஆனந்தா கல்லூரி வளவுகளினால் அத்துடன்

மேற்கு ; ஆனத்தா கல்லூரி வளவுகளினால்.

8–618—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

**வாடி வீடுகள் சட்டம்**

1972, திசெம்பர் 8 ஆந் திகதிய 37 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு, 1973, சனவரி 12 ஆம் திகதிய 42 ஆம் இலக்க மற்றும் 1973, யூன் 14 ஆம் திகதிய 64 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு கசெற்று அறிவித்தல்களினால் திருத்தப்பட்ட வாடிவீடுகள் சட்டம் இதனகத்துள்ள அட்டவணையின் "தங்குதற் கட்டணம்" என்னும் தலைப்பின் கீழ் உப பந்தி (1) ஐ அடுத்து பின்வரும் வாக்கியத்தை இடுவதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது.

"ஓர் அறையில் தங்குபவர் வாடிவீட்டில் உணவை உண்ணுவிடின் அவரிடமிருந்து தங்குதல் கட்டணத்திற்கு (அறை வாடகை) மேலும் ரூபா 2 அறவிடப்படும்."

மேற்போந்த திருத்தம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 1973, செத்தெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

பி. எச். சிரிவர்தன,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 8 ந் உ.

8–789—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

**1972 ஆம் ஆண்டின் 7 ஆம், இல வாடகைச் சட்டம்**

1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இல. வாடகைச் சட்டத்தின் 2 (1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் திரு. பீற்றர் ஜெரல்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான் இவ்வறிவித்தலால்,

(அ) இதற்கு இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரதேசங் களில் ஒவ்வொன்றினையும் முற்கூறிய சட்டம் நடைமுறையிலிருக் கும் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துகின்றேன். அத்துடன்,

(ஆ) கசெற்றில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படும் தேதியை இந்த அறிவித்தல் நடைமுறையாக்கும் தேதியாக நியமிக்கின்றேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு, நிர்மாண அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 27 ந் உ.

**அட்டவணை**

1. சிலாபம் மாவட்டத்தில் மெடபலாத கிராமசபை நிருவாக எல்லை களுக்குள்ளே இருக்கின்ற பிரதேசம்.

2. சிலாபம் மாவட்டத்தில் யற்றக்கலன்பத்து கிராமசபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளே இருக்கின்ற பிரதேசம்.

3. சிலாபம் மாவட்டத்தில் வெனப்புவ பட்டின சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளே இருக்கின்ற பிரதேசம்.

4. சிலாபம் மாவட்டத்தில் கம்மல்பத்து கிராம சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளே இருக்கின்ற பிரதேசம்.

8–737—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### ஈட்டுச் சட்டம்

(89 ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் பிரிவு 3 (இ) யினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டும், சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 114 (2) ன் கீழ் ஆக்கப்பட்ட சபையின் விதப்புரையின் மீதும், வர்த்தகப்பணிப்பாளர் கிரி பண்டா திசநாயக ஆகிய நான், த வினன்ஸ் கொம்பனி லிமிடெட் எனும் நிறுவனத்தை, அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் கொடுக்கும் நிறுவனமாகவிருக்குமென்பதை இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 6 ந் உ..

வர்த்தகப்பணிப்பாளர்,

8–756/1—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

---

### நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக் கட்டளைச் சட்டம்

(86 ம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 (1) (அ) பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, வர்த்தகப் பணிப்பாளர் கிரி பண்டா திசநாயக ஆகிய நான், த வினன்ஸ் கொம்பனி லிமிடெட் எனும் நிறுவனத்தை அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் கொடுக்கும் நிறுவனமாகவிருக்கு மென்பதை இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

வர்த்தகப்பணிப்பாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 6 ந் உ.

8–756/2—17.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 73

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வ.

**எல். டபிள்யு. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.